# කාර්යය සාධන වාර්තාව - 2014

# செயலாற்றுகை அறிக்கை - 2014

# Performance Report -2014








ඉදිකිරීම්, ඉංජිනේරු සේවා, නිවාස හා පොදු පහසුකම් අමාත්‍යාංශය

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

Ministry of Construction, Engineering Services, Housing & Common Amenities

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை 2014

## கௌரவ அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



தெற்காசியப் பிராந்தியத்தின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் கூடுதல் எண்ணிக்கையான நிரந்தர வீடுகளையும், குறைந்த எண்ணிக்கையான குடிசைகளையும் கொண்டுள்ள நாடென்ற வகையில் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தித் துறையின் வரலாற்றில் பெற்றுள்ள உச்சமட்ட முன்னேற்றத்தை அடைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் நாடு முற்றாக பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் துரித அபிவிருத்தியை நோக்கி நாடு பயணித்து வருகின்றது. அதற்கமைய இலங்கை வரலாற்றில் நிர்மாணத்துறையில் கூடுதலான வளர்ச்சி வேகம் அடையப் பெற்றிருப்பது தற்காலத்திலாகும். இந்த வளர்ச்சி வேகம் 22% இனையும் தாண்டியிருப்பது விசேட அம்சமாகும். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் பெரும்பாலான ஆண்டுகளில் இந்த வளர்ச்சி வேகமானது, 5% - 6% இடையே காணப்பட்டது.

2011 ஆம் ஆண்டு சனத்தொகை மற்றும் வீடுகள் பற்றிய கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய இலங்கையின் ஒட்டுமொத்த வீடுகளின் எண்ணிக்கை 5,195,331 ஆகுமென்பதுடன் இவற்றில் நிரந்தர வீடுகளின் எண்ணிக்கை 4,471,442 ஆகும். (கூரைஓடுகள், எஸ்பெஸ்ரஸ், கொன்க்றீட் இடப்பட்டுள்ளவை) இது ஒட்டுமொத்த வீடுகளின் எண்ணிக்கையில் 82% ஆகும். நிரந்தர வீடமைப்புத் தேவை காணப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 123,370 ஆகும்.

மகிந்த சிந்தனை எதிர்கால நோக்குக்கு அமைய அமுல்படுத்தப்பட்டுள்ள ஜனசெவண தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்திச் செயற்பாட்டின் மூலமும், பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சினாலும் இந்நாட்டின் வீடமைப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் மேலும் பல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினராலும் வீடமைப்பு நிர்மாணத்துறை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட ஜனசெவண நிகழ்ச்சித்திட்டத்தினால் ஒவ்வொரு துறையிலும் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஊக்கமானது வீடுகளை நிர்மாணிப்பதில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியிருப்பதாக விசேடமாக குறிப்பிடல் வேண்டும். பொதுவாக ஒவ்வொரு வருடமும் அனைத்துத் துறைகளிலும் சுமார் ஒரு இலட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை 4 இலட்சம் வரை அதிகரித்துள்ளதனால் இதனை நல்ல முறையில் புரிந்து கொள்ள முடியும்.

2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சனத்தொகை, வீடமைப்பு பற்றிய கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய இந்நாட்டின் வீடமைப்புத் தேவை 7 இலட்சத்திற்கும் குறைவாக உள்ளமையானது, இந்நாட்டின் வீடமைப்புத் துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை நல்ல முறையில் வெளிப்படுத்தக்கூடியதாக உள்ளது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறைகளில் அவற்றுக்கு மிக முக்கியமானதொரு செயற்பணியை ஆற்றியுள்ள ஆண்டாக 2014 ஆம் ஆண்டு வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

அண்மைக்கால வரலாற்றில் முதல் முறையாக தேசிய வீடமைப்புக் கொள்கை வெளியிடப்பட்டதுடன், அதற்கான செயல்ரீதியான திட்டமொன்றுடன் அதனை செயல்ரீதியாக அமுல்படுத்த ஆரம்பித்ததை, இலங்கையின் வீடமைப்புத்துறைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பாரியதொரு முன்னெடுப்பாக குறிப்பிட முடியும்.

இந்நாட்டின் நிர்மாணிப்புத் துறையின் முன்னேற்றம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கையாக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தை அமுல்படுத்தி நிர்மாண அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட முடியும். நிர்மாணிப்புத் துறை தொடர்பாக இலங்கைக்கிருந்த பெருமையை மென்மேலும் பாதுகாத்து உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் எமது நிர்மாணத்துறை தொழில்சார் வல்லுனர்கள் மற்றும் கலைஞர்களுக்கு தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களை வெளிக்கொண்டுவருவதற்கும், அதனூடாக வாய்ப்புக் கிடைத்துள்ளது. அத்துடன் ‘‘மஹாபிமானி’’ தேசிய நிர்மாண விருது வழங்கும் விழாவின் மூலம் முதல் தடவையாக ஒரே மேடையில் முதலீட்டாளர்கள் உட்பட நிர்மாணத்துறைக் கலைஞர்களுக்கு நாட்டுத் தலைவரிடமிருந்து விருதுகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமையானது அக்கலைஞர்களுக்கு உயர்பெருமையை ஈட்டித்தந்துள்ளது.

பல வருடகாலமாக சேதமடைந்த நிலையில் காணப்பட்ட 22 தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள் தற்போது முற்றாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் 23 தொடர்மாடி வீடமைப்புத்திட்டங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

2014 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனமானது, சுமார் 4000 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க 20 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்துள்ளது.

இலங்கைப் பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2011 ஆம் ஆண்டின் புரள்வு 5473 மில்லியன் ரூபாவாகும். மேற்படி புரள்வை 2014 ஆம் ஆண்டில் 10000 மில்லியன் ரூபாவாக வளர்த்துக் கொண்டதன் மூலம் அரசாங்க நிருமாண நிறுவனம் என்ற வகையில் இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள வெற்றி முக்கியமானதாகும். பயங்கரவாதத்தை முற்றாகத் தோல்வியுறச் செய்த பின்னர் எமது தாய்நாடு பல்வேறு வெற்றிகளைப் பெற்று முன்னோக்கிச் செல்லக் காரணம், பல்வேறு சவால்களையும் நல்லமுறையில் வெற்றி கொண்டதனாலாகும். நாடு, தேசம் மற்றும் சமாதானத்திற்காக இவ்வனைத்து சவால்களையும் வெற்றிகொள்வதற்கான சக்தியையும், மனஉறுதியையும் பெற்று இந்தப் பயணத்தின் பெருமைமிகு பங்காளராகும் வாய்ப்பு எம்அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு எதிர்காலத்துக்கு நல்வாழ்த்துக்கள் !

**விமல் வீரவங்ச (பா.உ.)**

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு,

பொது வசதிகள் அமைச்சர்.

## கௌரவ பிரதி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற துரிதமான அபிவிருத்திச் செயற்பாட்டின் முன்னிலையில் இருந்தவாறு நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி துறையில் பாரியதொரு செயற்பணியை நிறைவேற்றி வருகின்ற நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் 2014ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததை மகிழ்ச்சியாக கருதுகின்றேன்.

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு நிர்மாணத்துறை பெற்றுக்கொடுத்த பங்களிப்பு 2013ஆம் ஆண்டில் 8.6% ஆக இருந்ததுடன் 2014ஆம் ஆண்டில் இது 9.7% ஆக வளர்ச்சியடைந்துள்ளது. அதற்கமைய இந்த நாட்டில் இடம்பெறுகின்ற துரித அபிவிருத்தி தொடர்பிலான நிர்மாணிப்புக் கைத்தொழிலின் பங்களிப்பு தேசிய வருமானத்தில் 10% ஆகும் என்பதுடன் வருடாந்த வளர்ச்சி சுமார் 17% ஆகும்.

நிர்மாணிப்பு கைத்தொழிலுக்கு நீண்டகாலத் தேவையொன்றாக காணப்பட்ட நிர்மாணிப்புக் கைத்தொழிலின் சகல பணிகளையும் ஒரே இடத்தில் இருந்து ஒழுங்குபடுத்துகின்ற பணிக்கென நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சபையாக மாற்றியமைக்கின்ற நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடிந்தமை பெருவெற்றியாகும் அதனூடாக நிர்மாணிப்புக் கைத்தொழிலை சரியான திசையில் வழிநடாத்தவும் ஆற்றல் கிடைக்கும்.

அவ்வாறே இந்த துறையில ஈடுபட்டுள்ள கலைஞர்களை பாராட்டும் வகையில் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற தேசிய நிர்மாண விருது வழங்கும் வைபவத்தின் ஊடாக அவர்களுக்கு உயர்மட்ட சமூக பெறுமானம் ஒன்றை பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளதுடன் கலைஞர்களை ஊக்குவிக்கவும் அது காரணமாக அமைந்துள்ளது.

மேலும், இலங்கையில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் தமது சொந்த வீடொன்றுக்கான உரிமையை உறுதிசெய்யும் வகையில் குறைந்த வருமானம் பெறுகின்ற, நடுத்தர வகுப்பினர்கள், அரசாங்க ஊழியர்கள், தோட்டத்துறை, மீனவர் சமுதாயத்தை இலக்காகக் கொண்டு அமுல்படுத்தப்பட்ட ஜனசெவன வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் அடையப்பெற்ற முன்னேற்றங்கள் பற்றிய தகவல்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பழைய தொடர்மாடி வீடமைப்பு திட்டங்களை மறுசீரமைத்தல் அரசாங்க மற்றும் வேறு வீடுகளில் வசிக்கின்ற வாடகை குடியிருப்பாளர்களுக்கு அந்த வீடுகளின் சட்ட ரீதியான உரிமையை கையளித்தல் போன்ற பணிகளையும் அமுல்படுத்தி வீடமைப்பு பிரச்சனைகளை தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசேடமாக குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல் மற்றும் சிறுவர்களின் திறன்களை வளர்க்கும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்தி பண்புமிக்க நல்லதொரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சு மற்றும் அதன்கீழ் இயங்கிவருகின்ற சகல நிறுவனங்களும் நிறைவேற்றுகின்ற செயற்பணிகளின் போது சரியான தலைமைத்துவத்தையும், வழிகாட்டல்களையும் வழங்கி

சகலருக்கும் பலம் சேர்த்துவருகின்ற கௌரவ அமைச்சர் விமல் வீரவங்ச அவர்களுக்கு எனது நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

அவ்வாறே இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கிக்கொள்ள தேவையான ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் பெற்றுக்கொடுத்து வருகின்ற அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சகல பதவியணியினருக்கும் பல்வேறு சவால்கள், தடைகளுக்கு மத்தியில் இவ்வனைத்து வெற்றிகளையும் அடைந்து கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சகல நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பதவியிணியினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதற்கு இதனை வாய்ப்பாக கொள்கின்றேன்.

சுபீட்சமிக்க இலங்கையை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

**லசந்த அழகியவன்ன (பா.உ)**
நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு,
பொது வசதிகள் பிரதி அமைச்சர்

## செயலாளரின் வாழ்த்துச்செய்தி



இலங்கையை ஆசியாவின் வியத்தகு விந்தையாக மாற்றியமைப்பதற்காக மகிந்த சிந்தனைக் கொள்கை சட்டகத்திற்கு அமைய நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு 2014ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றேன்.

வீடமைப்பு அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் பொதுவான பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் சாதகமான பெருபேறுகளை வெளிப்படுத்துகின்ற விசேட துறையொன்றாகும். இந்த நாட்டின் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழுகின்ற மக்களை இலக்காக கொண்டு அமுல்படுத்தப்பட்டுள்ள ஜனசெவன பத்து இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் வீடுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு கடன் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நாடுமுழுவதும் அமுல்படுத்தி வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் அவர்களை வலுவூட்டுவதற்காக சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு நகர மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் பற்றியும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே காணிகள் இல்லாத மக்களுக்கு காணித்துண்டுகளை வழங்கி அரசாங்க வீடுகளில் வசிக்கின்றவர்களுக்கு அறுதி உறுதிகளை கையளிப்பதும் 30 வருடங்களுக்கும் மேல் பழைமைவாய்ந்த தொடர்மாடி வீடுகளை புனரமைப்பதன் மூலமும் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனசெவன தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக சமூகத்தின் சகல பிரிவுகளினதும் வீடமைப்புத் தேவையை பூர்த்தி செய்வதற்காக மிகவும் நிரந்தரமான வேலைத்திட்டம் ஒன்றாக அமுல்படுத்துவதற்கு தயார்செய்யப்பட்டுள்ள தேசிய வீடமைப்புக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான தேசிய வீடமைப்பு செயல்ரீதியான திட்டமும் தற்போது தயார்செய்யப்பட்டு வருகின்றது. இதன்மூலமாக மக்களுக்கு மிகவும் வசதிகளைக் கொண்ட தரமான தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் சுற்றாடலுக்கு சாதகமான மற்றும் பாதுகாப்பான வீடொன்றில் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் நிர்மாணக் கைத்தொழிலை மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும் பூகோள ரீதியாக நம்பகமான போட்டித்தன்மைமிக்க கைத்தொழிலாகவும் மாற்றியமைக்கின்ற நோக்கத்துடன் தயார்செய்யப்பட்டுள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் இலங்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டமை விசேட வெற்றியொன்றாகும்.

நிர்மாணிப்புத் துறையின் துரித அபிவிருத்தியுடன் உருவாகியுள்ள ஊழியச்சந்தையின் பயன்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மனிதவளங்களை பூரணப்படுத்துவதற்காக நிர்மாணிப்பு நிறுவனங்களை வலுவூட்டி தரத்தை உயர்மட்டத்துக்கு கொண்டுவருதல் மற்றும் ஊழியப் படையணியை ஆயத்தப்படுத்துகின்ற தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கலைஞர்களை வலுவூட்டும் செயற்பாட்டுக்கு விசேட பங்களிப்பை இதனூடாக பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற பாரிய அபிவிருத்தியின் பங்காளராக மாறி மேற்கொள்ளப்படுகின்ற பெருந்தெருக்கள் நீர்மின் உற்பத்தி நிலையங்கள், சுரங்கப்பாதைகள், அரசாங்க கட்டிடங்கள், நீர்ப்பாசனம், பாலம் போன்ற பாரியளவான கருத்திட்டங்களை அமுல்படுத்தி நிர்மாணத்துறையில் துரிதமான அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்கி

அமைச்சின் கீழ் உள்ள நிர்மாணிப்புத்துறை நிறுவனங்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பெரும் செயற்பணியொன்றை நிறைவேற்றி வருகின்றன.

இவ்வனைத்து அபிவிருத்தி இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொண்டு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுத்து நல்லதொரு முகாமைத்துவத்துடன் நாம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதுடன் தேவையான வளங்கள் மற்றும் ஏற்பாடுகளை பெற்றுக்கொடுத்து கௌரவ அமைச்சரின் தலையீட்டுடன் அமுல்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சிட்டங்களின் ஊடாக வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடிந்தது.

இவ்வனைத்து வெற்றிகளுக்கும் பின்னணியாக இருந்து செயற்பட்டு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற்றுத்தந்து அபிவிருத்தி இலக்குகளை நோக்கி எம்மை வழிநடாத்துகின்ற கௌரவ அமைச்சர் விமல் வீரவங்ச அவர்களுக்கும் எப்பொழுதும் பூரண ஒத்துழைப்பினை வழங்கி ஊக்குவிக்கின்ற கௌரவ பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவ்வாறே இவ்வனைத்துப் பணிகளையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்கிய மேலதிக செயலாளர்கள், அமைச்சின் அனைத்து அலுவலர்கள், மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டின் முன்னோடிகளாக நின்று இந்தப் பாரிய செயற்பணிக்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கி செயற்பட்டு வருகின்ற அமைச்சுடன் இணைந்துள்ள அனைத்து நிறுவனங்களினதும் தவிசாளர்கள், பொது முகாமையாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள் உள்ளிட்ட அனைத்து பதவியணியினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பி.எச்.எல். விமலசிறி பெரேரா**

செயலாளர்

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,

வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு.

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 29-30 |
| 2. அமைச்சின் நோக்கும், செயற்பணியும் | 31 |
| 3. அமைச்சின் விடயப்பரப்பு | 31-32 |
| 3.1 அமைச்சின் பிரதான விடயப்பரப்புகள் | |
| 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு | 33 |
| 5. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 34-35 |
| 6. அமைச்சின் ஒழுங்கமைப்பு | 36-40 |
| 6.1 நிருவாகப் பிரிவு | |
| 6.2 திட்டமிடல் பிரிவு | |
| 6.3 வீடமைப்புப் பிரிவு | |
| 6.4 தொழில்நுட்பப் பிரிவு | |
| 6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| 6.6 நிதிப் பிரிவு | |
| 6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | |
| 7. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் | 42-43 |
| 7.1 நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் | |
| 7.2 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | |
| 7.3 அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | |
| 7.4 கட்டிடத் திணைக்களம் | |
| 7.5 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| 7.6 நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| 7.7 அரசாங்க தொழில்சாலை | |
| 7.8 ஓசன்வீவ் அபிவிருத்தித் தனியார் கம்பனி | |
| 7.9 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| 7.10 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை | |
| 8. நிதி ஏற்பாடுகள் | 45-46 |
| 9. 2013 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் முன்னேற்றம் | 47-53 |
| 9.1 நிருவாகப் பிரிவு | |
| 9.2 திட்டமிடல் பிரிவு | |
| 9.3 வீடமைப்புப் பிரிவு | |
| 9.4 தொழில்நுட்பப் பிரிவு | |
| 9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| 9.6 கணக்காய்வுப் பிரிவு | |
| 2013 ஆம் ஆண்டில் அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள் | 54-55 |

# 1.அறிமுகம்

இலங்கையில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வதற்கு வீடொன்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்படுகின்ற ஜனசெவன வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கை 2011ஆம் ஆண்டு முதல் நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு மற்றும் அதன்கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்களினால் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கிராமிய, நகர, குறைந்த வருமானம் பெறுகின்ற, நடுத்தர உறுப்பினர், அரசாங்க ஊழியர்கள், யுத்தத்தினால் இடம் பெயர்ந்துள்ளவர்கள், தோட்டப்புற மற்றும் மீனவர் சமுதாயத்தை இலக்காகக் கொண்டு இலங்கையின் அனைத்து பூகோள பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் வீடமைப்புச் சிக்கல்களை தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை காலம் அமுல்படுத்தப்பட்டு வந்திருந்த பல்வேறு வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி ஆராய்ந்து அவற்றின் அனுபவங்களையும் கவனத்தில் கொண்டு இத்துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு அமைச்சுக்கள் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் கருத்துக்களையும் பொதுமக்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொண்டு தேசிய வீடமைப்பு கொள்கையை தயார்செய்து கொள்ளும் வாய்ப்பு அமைச்சுக்கு கிடைத்தமை ஒரு முக்கிய வெற்றியாகும். இதன்மூலம் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் வீடமைப்புத் தேவையை நிறைவேற்றுவது பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் தரமான தாங்கிக்கொள்ளக்கூடிய விலைக்கு சுற்றாடலுக்கு சாதகமான மற்றும் பாதுகாப்பான வீடமைப்பு வசதிகளை சகல இன மக்களுக்காகவும் பெற்றுக்கொடுப்பது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் சமாதனம் உருவாக்கப்பட்டதை அடுத்து அரசாங்கத்தினால் நாட்டினுள் அமுல்படுத்தப்பட்ட பாரியளவான நிர்மாணிப்புக்கள், வீதிக்கட்டமைப்பு, பாலங்கள், பல்வேறு நீர் வழங்கும் கருத்திட்டங்கள், மின்சார கருத்திட்டங்கள் போன்ற அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியானது துரிதமாக இடம்பெற்று வருவது கடந்த காலங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்ததனால் தனியார் துறையில் நிர்மாணத்துறையின் முதலீடு அதிகரித்தமை காரணமாக நிர்மாணத்துறையில் கணிசமான ஒரு வளர்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எழுச்சியானது நிர்மாணக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமன்றி நிர்மாணிப்புத்துறைக்கு மூலப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற மற்றும் இந்த துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு தேவைகளுக்கு பங்களிப்பை வழங்குகின்ற கலைஞர்கள், தொழில்சார் வல்லுனர்கள் ஆகியோரின் தொழில் மட்டங்கள் மற்றும் ஸ்திர தன்மையை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

இந்நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்குகின்ற நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றம் காரணமாக நாட்டுக்கு, உள்நாட்டு நிர்மாணத்துறை கலைஞர்களுக்கு மற்றும் சகல சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் பல்வேறு பயன்களை பெற்றுக்கொடுக்கத் தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்து நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் பல்வேறு நிர்மாணிப்பு கருத்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக எமது அமைச்சின் நிர்மாணிப்பு நிறுவனங்களான அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம், அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம், அரசாங்க தொழிற்சாலை போன்றன பெரும் செயற்பணிகளை நிறைவேற்றி வருகின்றன. இவ்வாறு வளர்ச்சியடைந்து வருகின்ற நிர்மாணிப்புக் கைத்தொழில் துறைக்குத் தேவையான ஊழியப்படையை தயார்செய்யும் தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் கருத்து ரீதியான மேம்படுத்தல்களை வழங்கி தொழில் வல்லுனர்கள் மற்றும் நிர்மாணத்துறை கலைஞர்களை நிபுணத்துவமிக்க மற்றும் அறிவின் ஊடாக வலுவூட்டுவதற்கு இந்த ஆண்டுமுதல் நிர்மாணத்துறை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. நிர்மாணிப்புத் துறையின் சகல கலைஞர்களையும் தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்வதற்காக “மகாபிமானி” எனும் தேசிய நிர்மாணத்துறை வாரமும் விருது வழங்கும்

வைபவமும் ஒழுங்கு செய்யப்பட்டதன் ஊடாக நிர்மாணிப்புத் துறையின் தொழில்சார் கலைஞர்கள் மற்றும் சகல தரப்பினர்களையும் உயர்மட்டத்தில் பாராட்டுவதானது கடந்த ஆண்டுமுதல் முதல்முறையான முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்காலத்திலும் வெற்றிகரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் பொருளாதார மற்றும் மனித அபிவிருத்தியை நல்ல முறையில் சீராக்கல் செய்து பேணிவர வேண்டும். அதற்கு சமூகத்தின் அடிப்படை அம்சமான குடும்பத்தை அபிவிருத்திச் செயற்பாட்டில் இணைத்துக்கொள்ள செயற்பட வேண்டும். கொழும்பு நகரத்தில் உள்ள சகல நகர்ப்புற அதிகாரப் பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் குறைந்த வசதிகளைக் கொண்ட இனக்குழுவினர் குழுக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டும் நோக்கத்துடன் ‘‘ஜனசெவன’’ மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2010ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த சமுதாயத்தின் திறமைகள் மற்றும் கருத்து ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், சேமிப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், சுயதொழில் வாய்ப்பை மேம்படுத்தல் மற்றும் சமூக, கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன அமுல்படுத்தப்பட்டு அவர்களையும் பொருளாதார அபிவிருத்தியின் வெற்றிகரமான பங்காளர்களாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாட்டில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்களினால் 2014ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. அமைச்சின் நோக்கும், செயற்பணியும்

### நோக்கு

நிலையான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் புத்தெழுச்சி

### செயற்பணி

இலங்கைத் தொழில்முயற்சியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் ஊழியப் படையணியை ஆற்றல்கள் மற்றும் வளங்கள் மிக்கவர்களாக்கி திட்டமிட்ட சுற்றாடல்களுக்குச் சாதகமான மற்றும் தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் சமுதாயத்தின் பங்கேற்புடன் அடிப்படை வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை உருவாக்குதவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்”

## 3. அமைச்சின் விடயப்பரப்பு

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கொள்கைகள், அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள உரிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்

## 3.1 அமைச்சின் பிரதான விடயப்பரப்புக்கள்

# நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

### வீடமைப்புத் துறை

01. குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளடங்களாக பொது மக்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வீடமைப்பு நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

02. சுற்றாடலுக்கு சாதகமானவாறு செலவினத்திற்கு ஏற்ற பயன்களைப் பெற்றுத்தருகின்ற வீடமைப்பு தொழில்நுட்ப முறைகள் பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல்.

03. வீடமைப்பு விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

### நிர்மாணத் துறை

01. நிர்மாண விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு, மதிப்பீடு செய்தல்.

02. நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தும் சேவைகளை வழங்குதல் மற்றும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்குவது மற்றும் பராமரிப்புச் செய்வது பற்றிய பயிற்சி.

03. உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் நியமங்களுக்கு அமைய நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல்.

### பொறியியல் துறை

01. அரச நிறுவனங்களுக்கு இயந்திரப் பொறியியல் சேவைகளை ஆற்றுதல்.


02. அரச உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் ஏஜனய கட்டிடங்களுக்கான நியமங்களையும், நியதிகளையும் நிர்ணயித்தல்.

### பொது வசதிகள் துறை

01. கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள்.

02. பொதுக் கூட்டாட்சி ஆதனங்களை மறுசீரமைப்புச் செய்தல் மற்றும் வினைத்திறனுடனும், துரிதமாகவும் வீடுகளின் உரிமைகளை பொறுப்பளித்தல்.

# 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு



## 5. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

| தொ. இல. | பதவி | சம்பள அளவுத் திட்டம் | ஏற்புடைய சேவை | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | SL 4 | | 01 |
| 02 | மேலதிகச் செயலாளர் (நிருவாகம், நிதி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 03 | மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 04 | மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்) | SL 3 | இ.பொ.சே. 1 | 01 |
| 05 | பிரதம நிதி அலுவலர் | SL 3 | இ.க.சே. விசேட | 01 |
| 06 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம் | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 07 | பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 08 | பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம் | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 09 | பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே. 1 | 01 |
| 10 | பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 11 | பணிப்பாளர் (USD) | SL 1 | இ.பொ.சே. | 01 |
| 12 | வீடமைப்பு ஆணையாளர் | SL 1 | - | 01 |
| 13 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1.11/111 | 02 |
| 14 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |
| 15 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே.11/1,11/11 | 01 |
| 16 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.பொ.சே 11/1,11/11 | 01 |
| 17 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |
| 18 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (USD) | SL 1 | இ.பொ.சே.11/111 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இ.பொ.சே.11/11 | 01 |
| 19 | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | SL 1 | இ.நி.சே.111 | 02 |
| 20 | கணக்காளர் | SL 1 | இ.க.சே.11/1,11/11 | 02 |
| 21 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SL 1 | இ.க.சே | 01 |
| 22 | சட்ட அலுவலர் | SL 1 | திணைக்கள | 01 |
| 23 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர் | SL 1 | இ.த.தொ.சே.2/II | 01 |
| 24 | நிருவாக அலுவலர் | MN7 | அ.மு.உ.சே. (சிறப்புத்தரம்) | 01 |
| 25 | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிகம்) | -- | -- | 01 |
| 26 | மொழிபெயர்ப்பாளர் | MN6 | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 |
| 27 | வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 28 | வழங்கல் உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 29 | அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 25 |
| 30 | வீடமைப்பு அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 11 |
| 31 | முகாமைத்துவ உதவியாளர் | MN4 | அ.மு.உ.சே. | 43 |
| 32 | தொழில்நுட்ப அலுவலர் | MT2 | இ.தொ.சே. | 05 |
| 33 | கனிய அளவையாளர் (QS) | MT2 | இ.தொ.சே | 01 |
| 34 | சாரதி | PL3 | சாரதி சேவை | 22 |
| 35 | அலுவலக சிற்றூழியர் | PL1 | அலுவலக சிற்றூழியர் சேவை | 22 |
| மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | | | | **162** |

## 6. அமைச்சின் ஒழுங்கமைப்பு



## 6.1 நிருவாகப் பிரிவு

“நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சினால் அரசாங்கக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் பொது நலன்புரிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு பணிகளின் போதும் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் ஒத்துழைப்பினை வழங்கி அதற்குத் தேவையான வேலைச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் மனித வள மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் முகாமைத்துவம் செய்வது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது”

### நிருவாக பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் தாபான நடவடிக்கைகளை பேணி வருதல்.
2. அமைச்சின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளும்.
3. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகள்
4. அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் அமைச்சின் தலையீட்டின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிருவாக நடவடிக்கைகளும்
5. அமைச்சின் பதவியணி சம்பந்தமான நடவடிக்கைகள்.
6. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
7. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
8. உற்பத்தித் திறன் செயற்பாடுகள் மற்றும் பயிற்சி அமர்வுகளை நடாத்தல்.
9. அமைச்சின் நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
10. அமைச்சின் அலுவலர்களுக்கான பயிற்சித் தொடர்களை நடாத்தல்.

## 6.2 திட்டமிடல் பிரிவு

“அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நிறுவனங்களை வழிநடாத்த உதவுதல்”

“வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தல்”

“வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி, திட்டமிடல் அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுவதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.”

### திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயல் ரீதியான திட்டத்தைத் தயார் செய்வதற்கான உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
2. 2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த செயற்திட்டத்திற்கமைய மதிப்பீடு செய்தல்.
3. வரவு செலவுத்திட்ட விவாத குழுநிலைக்கு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

4. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும் அறிக்கையிடுவதும்.

5. அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள கருத்திட்டப் பிரேரணைகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.


## 6.3 வீடமைப்புப் பிரிவு

“வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் பொதுவசதிகள் ஆகிய விசேட துறைகளின் கீழ் தேசிய திட்டங்களை திட்டமிடல், திட்டங்களைத் தயார் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்”

### வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்

**1. கொள்கைகளை வகுத்தல்**

- வீடமைப்புத் துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்.
- உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் வீடமைப்பு, நிர்மாணிப்பு சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும், உலகக் குடியிருப்புத் தினத்தைக் கொண்டாடுவதும்.




**2. காணிகள் பற்றிய கடமைகள்**

- வீடமைப்பு அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணிகளைச் சுவீகரித்தல்/ பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்
- வீடமைப்பு அபிவிருத்திக்கு காணிகளைச் சுவீகரித்தல்/ பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்
- வீடமைப்பு நோக்கங்களுக்கு காணிகளை நீக்குவது சம்பந்தமான நடவடிக்கைகள்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்/ வீடுகளுக்கான சட்ட ரீதியான உரித்தினை பொதுமக்களுக்கு நீக்குதல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான காணிகளில் சட்ட விரோதமாக வீடுகளை நிர்மாணித்து வசித்துள்ள வசிப்பாளர்களை அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய ஒழுங்குபடுத்தல்.

**3. வீடமைப்பு அபிவிருத்தி**

- நாட்டின் வீடமைப்புத் தேவைக்குப் பொருத்தமானவாறு வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை மறுசீரமைத்தல்.

- வீடமைப்புக் கடன் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பித்தல்.
- வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் வீடமைப்புக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.

## 6.4 தொழில்நுட்பப் பிரிவு

### 6.4.1 பொறியியல் சேவைகள் பிரிவு

“நிர்மாணிப்புக் கருத்திட்டங்களுக்கு நியாயமான மற்றும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் ஒட்டுமொத்த நிர்மாணிப்புக் கைத்தொழிலின் மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிப்படைத் தன்மை மிக்க நியாயமான விலைகளுக்கமைய ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.”

#### பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்

1. அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணிப்பு சம்பந்தமான நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் வழங்கல் குழுக்களை நியமனம் செய்தல்.
3. ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
4. அமைச்சின் வழங்கல் குழுவின் தீர்மானங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
5. ஒப்பந்ததாரர்கள் சம்பந்தமான நிர்மாணிப்புத் துறைக்குரிய தரவுக் கட்டமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறை சம்பந்தமான விலைகள் பற்றிய தரவுக்கட்டமைப்பைப் பேணிவரல்.

### 6.4.2 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு

“சுற்றாடலுக்குச் சாதகமான, தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்துவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

#### நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிர்மாணிப்புத் துறையுடன் இணைந்துள்ள நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணிப்புக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக வழிநடாத்தல்.
2. நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப் படையைத் தயார் செய்தல்.
3. தொழில் வல்லுனர்கள், நிர்மாணிப்புக் கலைஞர்களை திறமையும் அறிவும் மிக்கவர்களாக்குதல் மற்றும் தரமான நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்தல்.

### 6.4.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு

“பிரதானமாக நகர்ப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் ஏனைய மக்களுக்குத் தேவையானவாறு வசிப்பதற்கு ஆற்றல் உள்ள வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதை வழிநடாத்தல் மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தியானது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

#### நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அபிவிருத்திப் பிரேரணைகளை அமைச்சின் நிலையான கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின்

ஊடாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்.

2. நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

## 6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இந்தப் பிரிவு 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்றது. அவ்வாறே, 1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சில பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

"மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான நோக்கங்களான வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக இந்தப்பிரிவு செயற்பட்டுவருகிறது"

## 6.6 நிதிப் பிரிவு

"அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் நிருவாக முறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது."

1.நிதி பற்றித் திட்டமிடல்.
2. வரவுசெலவு பற்றித் திட்டமிடல்
3. நிதியைப் போதியளவிற்கு உரிய நேரத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.
4. அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிதி வழங்குதல் மற்றும் செலவிடல்.
5.சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு செலவினம் மற்றும் நிதி முன்னேற்றம் பற்றி உரிய திகதிகளுக்கு அல்லது அதற்கு முன்னர் அறிக்கையிடல்.

## 6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

"நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தங்களாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபித்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது."

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்த நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து உதவுதல் இப்பிரிவின் பிரதான பணிகளாகும்.

## 2014 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்




கடுவலையில் நெடுஞ்சாலைக்குப் பிரவேசிக்கும் இடத்திலுள்ள கட்டிடம்



பல்லேகெலே சிறைச்சாலைக் கட்டிடம்



உலப்பனை பாலத்தை நிர்மாணித்தல்



புதிய லக்ஷபான மின்உற்பத்தி நிலைய சுரங்கப்பாதை



வீதிச் சமிஞ்சைக் கட்டமைப்பைத் தாபித்தல் மாத்தறை - கொடகம



பெரியகுளம் வீடமைப்புக் கருத்திட்டம்

# 6. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்

## 7.1 நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

(ICTAD) 1957 இல் அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். தற்போது நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் கீழ் அதன் தவிசாளரின் தலைமையிலான பணிப்பாளர் சபையின் கீழ் இது இயங்கி வருகின்றது.

## 7.2 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 ஒக்டோபர் 01 ஆம் திகதி பொறியியல் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டது.

இந்தக் கூட்டுத்தாபனம் பிரதான பொறியியல் நிறுவனம் என்ற வகையில் பாலங்கள், பெருந்தெருக்கள், கட்டிடங்கள், சுரங்கப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பினை வழங்கி வருவதுடன் பாலங்களை நிர்மாணித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனமாகவுள்ளது. அவ்வாறே சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் ஒரே இலங்கை நிறுவனமும் இந்தக் கூட்டுத்தாபனமாகும்.

## 7.3 அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் கீழ் பேணி வருகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றான இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் 1962 ஜனவரி 01 ஆம் திகதிய 12841 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனமாகும்.

பொறியியல் கூட்டுத்தாபனமானது நிர்மாணிப்புத் துறையின் அரச துறையைச் சேர்ந்த முன்னோடி நிறுவனமாகும். இதன் மூலம் பொறியியல் சேவையை வழங்குதல், ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி

## 7.4 கட்டிடங்கள் திணைக்களம்

ஆரம்பத்தில் அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டதுடன் 1969 இல் "ஏ" தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக கட்டிடத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. அப்போதைய சகல அரச கட்டிடங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகளினதும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள், பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் கட்டிடத் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன். மேற்படி சகல நடவடிக்கைகளும் கட்டிடத் திணைக்களத்தின் மாவட்ட பொறியியல் அலுவலகங்கள் 27 இன் ஊடாக 5000 இற்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டன.

1989 இல் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதையடுத்து கட்டிடத் திணைக்களம் கொழும்பில் அமைந்துள்ள தலைமையகம் மற்றும் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்ட பிரதான 7 பொறியியல் அலுவலகங்களை உள்ளடக்கியதாக மீளமைக்கப்பட்டது.

## 7.5 தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்

இதன் பிரதான செயற்பணியாகவிருப்பது, இலங்கையிலுள்ள காணிகளில் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல் பிரிவுகள் பற்றிய கூட்டுத்திட்டங்களைத் தயார் செய்தல், மேம்படுத்தல், ஒழுங்குறுத்துவதை நோக்காகக் கொண்டு தேசிய பௌதீகத் திட்டங்களைத் தயார் செய்வதும் அமுல்படுத்துவதும், இயற்கை வசதிகளைப் பாதுகாப்பதும், இயற்கைச் சூழல், கட்டிடக் கலை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பிரதான கட்டிடங்கள் மற்றும் இயற்கை வனப்பு மிக்க இடங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

## 7.6 நகர குடியிருப்பு அதிகாரசபை

2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அதிகார சபைச் சட்டத்திற்கமைய இந்த அதிகார சபை நிலையான நகர குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு தற்போது காணப்படுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவதன் மூலம் அல்லது சிறந்த நல்ல வீடமைப்பு வசதிகள் மற்றும் ஆகக் குறைந்த வசதிகளுக்கான பிரவேசத்தை செய்துகொடுப்பதன் மூலம் சேவை வசதிகள் குறைவான நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் ஆட்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு தாபிக்கப்பட்ட நிறுவனமாகும்.

## 7.7.அரசாங்க தொழிற்சாலை

அரசாங்கத் தொழிற்சாலை மூலம் அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திர, பொறியியல் துறையில் உலோக மற்றும் தளபாடங்கள் சம்பந்தமான வேலைகள், பொருட்கள், சேவைகளை ஆற்றும் பணிகள் மற்றும் இயந்திரப் பொறியியல் துறையின் வேலைத்தளப் பயிற்சியளிக்கும்

## 7.8 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ளது.
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இந்த அதிகாரசபை அதன் கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2 நகர அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன் நாடு முழுவதும் வீடமைப்பு மற்றும் வீடமைப்பு அபிவிருத்தித் துறையில் தனது நடவடிக்கைகளை அமுல்படுத்தி வருகின்றது.

## 7.9 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை (திருத்தச்) சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டாட்சி நிர்மாணிப்புகள் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான ஒழுங்குறுத்தல் அதிகாரசபையாகும். மேலும் 1982 இன் 45 ஆம் இலக்க, 2003 இன் 39 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியமங்களை ஒழுங்குறுத்துவதும் இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

## 7.10 ஓஷன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

1996 ஜனவரி 01 ஆம் திகதி ஓஷன் வீவ் தனியார்க் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

ஜனசெவன 10 இலட்சம் வீடமைக்கும் தேசிய கொள்கைக்கு பலம் சேர்க்கும் அரச நிறுவனம் என்றவகையில் நம்பிக்கையும் பொறுப்பும்மிக்க தனியார் நிறுவனமொன்றாக வினைத்திறனை மையமாகக் கொண்டு இந்தக் கம்பனி வீடமைப்புச் சந்தையில் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்தி வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க செயற்பட்டு வருகின்றது.

# 2014ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சிலஅபிவிருத்திக் கருத்திட்டங்கள்



வடமேல் பல்கலைக் கழக கேட்போர்கூடம்



ருவன்வெல்ல பாலம் கருத்திட்டம்



தலவாக்கலை-லிந்துல வீடமைப்புக் கருத்திட்டம்



மொரட்டுவை அங்குலான வீடமைப்புக் கருத்திட்டம்



அநுராதபுரம் பிரதான விளையாட்டு மண்டபம், விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் தடாகம்



பிக்குமார் பல்லைக் கழக கட்டிடம் - அநுராதபுரம்

# 8. நிதி ஏற்பாடுகள்

2014 ஆம் ஆண்டு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் மேற்படி நிதி ஏற்பாடுகளின் 2014.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் பின்வருமாறு.

## ❖ அமைச்சின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 343,415,000 | 343,415,000 | 328,407,383 |
| மூலதனச் செலவினம் | 4,296,387,000 | 4,296,387,000 | 2,994,796,484 |
| | **4,639,802,000** | **4,639,802,000** | **3,323,203,867** |
| | | | |

## ❖ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய

நிகழ்ச்சித்திட்டம் 1 – செயற்பாட்டு நடவடிக்கைகள்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 227,415,000 | 227,415,000 | 224,391,383 |
| மூலதனச் செலவினம் | 13,775,000 | 13,775,000 | 237,477,070 |
| | **241,190,000** | **241,190,000** | **237,477,070** |
| | | | |

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 116,000,000 | 116,000,000 | 104,016,000 |
| மூலதனச் செலவினம் | 4,282,612,000 | 4,282,612,000 | 2981,710,797 |
| | **4,398,612,000** | **4,398,612,000** | **3,085,726,797** |
| | | | |

நிகழ்ச்சித்திட்டம் 2 – அபிவிருத்தி நடவடிக்கைகள்

## அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

**விடய இல.** 123011
123012

| | | | |
|---|---|---|---|
| | செலவின உச்ச வரையறை ரூ. | பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை ரூ. | வரவு நிலுவையின் உச்ச வரையறை ரூ. |
| **அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள்** | 7,000,000 | 4,000,000 | 40,000,000 |

| | | |
|---|---|---|
| **ஆண்டின் ஆரம்ப மீதி (2014.01.01)** | | 24,448,259 |
| **ஆண்டினுள் மொத்த வரவுவைத்தல்கள்** | | |
| 123011 | 5,197,781 | |
| 123012 | 1,335,371 | 6,848,772 |
| | | 31,297,031 |
| **ஆண்டினுள் மொத்த செலவு வைத்தல்கள்** | | |
| 123011 | 5,197,781 | |
| 123012 | 2,453,736 | (7,651,517) |
| **ஆண்டின் இறுதி மீதி (2014.12.31)** | | 23,645,514 |

# 9. ஆண்டுக்குரிய அமைச்சின் முன்னேற்றம்

## 9.1. நிருவாகப் பிரிவு

### ❖ அமைச்சின் பதவியணி வெற்றிடங்கள்

அமைச்சின் பதவிநிலைத் தரத்தைச் சேர்ந்த பதவிகளாகக் கருதப்படுகின்ற மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) பதவி 2014 ஆம் ஆண்டு வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், மேற்படி வெற்றிடத்தை 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யும் ஆற்றல் கிடைத்தது. அத்துடன் வெற்றிடகமாகக் காணப்பட்ட பதவி நிலை அலுவலர் பதவிகளான கணக்காளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) பதவிகளுக்கு அலுவலர்களை இணைப்புச் செய்துகொள்ளும் ஆற்றல் கிடைத்ததுடன், 2014 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் வெற்றிடமான சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிக்கு பதில் கடமையாற்றுவதற்கு உள்ளக வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்ய முடிந்தது. இலங்கைக் கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக இந்த ஆண்டிலும் பிரதம நிதி அலுவலர் பதவி வெற்றிடத்தை பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை.

மேலும் 2013 ஆம் ஆண்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைக்கு அமைய போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றிமான பதவிகளுக்கு தகுதிவாய்ந்த அலுவலர்கள் 4 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2014 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொண்டதுடன், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அலுவலக சிற்றூழியர் சேவைக்கு 5 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

அதற்கமைய 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 27 ஆகக் காணப்பட்ட ஒட்டுமொத்த பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைரய 10 ஆகக் குறைத்துக் கொள்ள முடிந்தது.

### ❖ அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் பாராளுமன்ற வினாக்களும்

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் விடயப்பரப்பிற்கு உரித்தான வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் நடவடிக்கைகள், அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் பிரதான விடயப்பரப்புகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டில் இந்த அமைச்சினால் 39 அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் அமைச்சரவைக் குறிப்புகள் 14 உம் சமர்ப்பிக்கப்படுள்ளன.

மேலும் அமைச்சின் மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் விடயப்பரப்பு சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டில் பாராளுமன்ற வினாக்கள் 08 கேட்கப்பட்டிருப்பதுடன் அந்த அனைத்து வினாக்களுக்கும் பதில் அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அவ்வாறே ஆலோசனைக் குழுவினூடாக இந்த ஆண்டில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட 54 கேள்விகளுக்கும் பதில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### ❖ பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்

இந்த அமைச்சின் விடயப்பரப்புக்கு அமைய பிரதானமாக பொதுமக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது வீடமைப்புடன் சம்பந்தமான சிக்கல்கள் தொடர்பிலாகும் என்பதுடன் ஜனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பொது மனுக் குழு ஊடாக மற்றும் ஒம்புட்சுமன் ஊடாகவும் மேற்படி கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இவ் அனைத்துக் கோரிக்கைகளுக்கும் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சு உடனடியாகச் செயற்பட்டுள்ளதுடன், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பிலான கோரிக்கைகள் சம்பந்தமாக நிறுவனத் தலைவர்கள் ஊடாக தகவல்களைப் பெற்று விண்ணப்பதாரர்களுக்கு பதில் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சு, அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அலுவலர்கள், ஊழியர்கள் தொடர்பிலான தொழில்சங்க மற்றும் தாபனச் சிக்கல்களுக்கு அமைச்சின் சிரேஷ்ட பதவி நிலை அலுவலர்களின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி விளைதிறன்மிக்க தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ❖ பயிற்சி மற்றும் உற்பத்தித் திறன் செயற்பாடுகள்

அமைச்சினால் பொது நிருவாகம், கணக்கு நடவடிக்கைகள், தாபன நடவடிக்கைகள், உற்பத்தித் திறன் செயற்பாடுகள், ஆளுமை விருத்தி மற்றும் திறன் விருத்தி போன்ற இனங்காணப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒவ்வொரு தரங்களையும் உள்ளடக்கும் வகையில் அலுவலர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அபிவிருத்தி அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் பட்டதாரிப் பயிலுனர்களுக்கு அலுவலக மற்றும் கடிதங்களைக் கோப்பிலிடல் பற்றிய இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு நடாத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக அமைச்சின் சகல ஊழியர்களுக்கும் மனப்பாங்கு அபிவிருத்தி பற்றிய ஒரு நாள் செயலமர்வும் நடாத்தப்பட்டதுடன், அரசாங்க அலுவலர்களின் இரண்டாம் மொழித் தேர்ச்சியை வளர்த்துக் கொள்வதற்காக தமிழ் மொழி பற்றிய விரிவுரைகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும் அரசாங்க நிறுவனங்களின் தகவல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய பாடநெறியை பயில்கின்ற பயிலுனர்கள் 16 பேருக்கு 2014 ஆம் ஆண்டில் அமைச்சினால் பயிற்சி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 9.2 திட்டமிடல் பிரிவு

### ❖ வருடாந்த செயற்றிட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சம்பந்தமான செயற்பாடுகளையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்படுவதுடன், 2014 ஆம் ஆண்டுக்காக அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டது.

வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவதானித்தல் மற்றும் மதிப்பீடு செய்யவென 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன் பிரதானமாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனும் பயன்மிக்கதாகவும் மாற்றியமைக்கும் பொருட்டு அவசியமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் இதன் மூலம் பெற்றுக்கொடுக்க முடிந்தது.

### ❖ முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள்

வருடாந்த செயற்திட்டத்திற்கமைய காலாண்டு அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் 4 முன்னேற்ற அறிக்கைகள் தயார் செய்யப்பட்டதுடன் அவை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அவ்வாறே கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினாலும் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் கண்காணிப்புச் செய்யப்படுவதுடன், அது சம்பந்தமான 4 முன்னேற்ற அறிக்கைகள் அமைச்சினால் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங் களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை சம்பந்தமாக அமுல்படுத்த திட்டமிட்டுள்ள 28 கருத்திட்டப் பிரேரணைகளை திரைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க முடிந்துள்ளது.

### ❖ ஜனசெவன பத்திரிகை

அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் தகவல்களை உள்ளடக்கி அது தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்கு ஜனசெவன என்றழைக்கப்படுகின்ற பத்திரிகை வெளியிடப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டில் தினமின பத்திரிகையின் ஒரு மேலதிக இணைப்பாக இவ்வாறான 12 வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

### ❖ அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை

ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை இந்த ஆண்டும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள், திட்டங்களுடன் தயார் செய்யப்பட்டு உரிய நேரத்திற்குள் சமர்ப்பிக்க அமைச்சு செயற்பட்டது.

## 9.3 வீடமைப்புப் பிரிவு

### ❖ தேசிய வீடமைப்புக் கொள்கையைத் தயார் செய்தல்

இலங்கையில் அமுல்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஆராய்ந்து அதன் அனுபவங்களுடன் 'மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு' இற்கு அமைய தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள 'சனசெவண' தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொருத்தமானவாறு வீடமைப்பு மற்றும் குடியிருப்புத் துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு அமைச்சுக்கள், நிறுவனங்களின் கருத்துக்கள், வீட்டு உரிமையாளர்களின் பங்களிப்பையும் பெற்று அமைச்சின் தலைமையில் தேசிய வீடமைப்புக் கொள்கையை வரைவு செய்யும் பணிகள் 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

2013 செம்தெம்பர் மாதம் தேசிய வீடமைப்புக் கொள்கையின் வரைவு பொது மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக வெளியிடப்பட்டதுடன், மேற்படி கொள்கை பற்றிய விபரங்கள் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய வீடமைப்புக் கொள்கை இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டது. இதனை அடுத்து தேசிய வீடமைப்புக் கொள்கை பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அமைச்சரவையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. உத்தேச தேசிய வீடமைப்புக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக சகல தரப்பினர்கள், நிறுவனங்களின் பங்கேட்புடன் தேசிய செயற்றிட்டமொன்று தயார் செய்யப்பட்டதுடன், இதனை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு கௌரவ அமைச்சரின் தலைமையில் 2014.10.20 ஆம் திகதி இடம்பெற்றது.

### ❖ 2014 உலகக் குடியிருப்புத் தினம்

நிர்மாணப், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் வீடமைப்பு மற்றும் குடியிருப்புமயமாக்கல் சம்பந்தமான ஐக்கிய நாடுகிள்ன மனிதக் குடியிருப்பு ஆணைக்குழுவின் இலங்கைக்கான பிரதிநிதித்துவ நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. இந்த அமைப்பினால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முக்கிய பணியொன்றாக குடியிருப்புத் தின நிகழ்ச்சித்திட்டம் காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமையை உலகக் குடியிருப்புத் தினமாக கொண்டாடிவருவதுடன், 2014 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ஆம் திகதி மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையில் இம்முறை உலகக் குடியிருப்புத் தினம் சுகததாச உள்ளக அரங்கில் கொண்டாடப்பட்டது. "Voice From Slums" என்பது இம்முறை உலகக் குடியிருப்புத் தினத்தின் தொனிப்பொருளாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மென்மேலும் விளைதிறன்மிக்கவாறு வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்திக்காகத் தயார் செய்யப்பட்ட பரந்தளவிலான நிகழ்ச்சித்திட்டங்களுடன் அமுல்படுத்த முடிந்தது.

நகரக் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக பல்வேறு கருத்திட்டங்களை அமுல்படுத்தல், இளைஞர், யுவதிகள், பெண்களின் சமூக பாதுகாப்புக்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், நகர்ப்புற பிள்ளைகளின், பாடசாலை மாணவர்களின் கலை, விளையாட்டு ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் கொழும்புச் சிறுவர்கள் எனும் கதம்ப நிகழ்ச்சியும் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் 1500 பேரின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் தாமரைத் தடாகம் அரங்கில் 2014.10.04 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதனை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடமைப்புக் கடன் மற்றும் உதவி வழங்கும் நிகழ்ச்சிகள், வயது 30-40 காலமாக மறுசீரமைக்காது காணப்பட்ட வீடமைப்புத் திட்டங்களை புனரமைத்து மக்களிடம் கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் உரித்து உறுதிகளை கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன.

### ❖ வீடமைப்பு மற்றும் நிலையான நகர அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகளின் மூன்றாவது மாநாடு (ஹபிடாட் III – 2016)

வீடமைப்பு மற்றும் நிலையான நகர அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகளின் மூன்றாவது மாநாடு (ஹபிடாட் III) 2016 ஆம் ஆண்டு நடாத்தப்படவுள்ளது. இது 20 வருடங்களுக்கு ஒரு தடவை

நடாத்தப்படுவதுடன், இம்மாநாடு இந்த அமைப்பின் சகல அங்கத்துவ நாடுகளிலும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பிலான கௌரவ அமைச்சர்கள் மற்றும் குறித்த நாடுகளின் தலைவர்களின் பங்கேட்புடன் நடாத்தபடும்.

1976 ஆம் ஆண்டு இதன் முதலாவது மாநாடு கனடாவின் வென்குவர் நகரில் நடைபெற்றதுடன், 1996 இல் துர்க்கியின் இஸ்தான்புல் நகரில் இரண்டாவது மாநாடு நடாத்தப்பட்டது.

மேற்படி மாநாட்டுக்கு ஹாபிடாட் அமைப்பின் அங்கத்துவ நாடாக இலங்கை மிகவும் ஆக்கபூர்வமான பங்கேட்பை வெளிப்படுத்தியுள்ளது. 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டின் தொணிப்பொருள் 'சகலருக்கும் வீடமைப்பு வசதிகள் மற்றும் நகர்ப்புற உலகில் நிலையான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி' என்பதாகும்.

மேற்படி தேசிய அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் அதற்குச் சமாந்தரமாக கடந்த 10 வருட காலப்பகுதிக்குள் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட பல்வேறு நிகழச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை அறிக்கையிடுவது ஐக்கிய நாடுகள் மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி நிறுவனம் என்ற வகையில் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் முக்கிய பொறுப்பாகும்.

இந்த அறிக்கையைத் தயார் செய்யும் போது வீடமைப்பு, குடியிருப்பு மற்றும் நகர அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுகின்ற அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், அதற்காக மேற்படி விடயங்களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கிய தேசிய வழிப்படுத்தல் குழுயை நியமனம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மேற்படி சகல தரப்பினர்களினதும் பங்கேட்புடன் செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன், மேற்படி அறிக்கையின் வரைவும் தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது.

## ❖ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியன வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்ற பிரதான நிறுவனங்களாகும் என்பதுடன், ஜனசெவண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகமு புரவர நிகழ்ச்சித்திட்டம், விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களின் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தோட்டப்புற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்றன இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமானவை ஆகும்.

ஜனசெவண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் இலக்கு வீடுகளின் எண்ணிக்கையான 28,104 இல் 22,813 வீடுகளின் வேலைகளை ஆரம்பிக்கும் ஆற்றல் கிடைத்துள்ளது. இது இலக்கின் 81.2% ஆன விகிதமாகும். மேலும் தொடர்ச்சியான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் இந்த ஆண்டுக்கான இலக்கு வீடுகள் 19,119 இல் 4,529 வீடுகளின் வேலைகளை நிறைவு செய்யும் வாய்ப்பும் கிடைத்தது.

நகமு புரவர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கூட்டாட்சி வீடமைப்புக் கருத்திட்டங்கள் 10 இனை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 32 வீடமைப்புக் கருத்திட்டங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இந்த ஆண்டுக்கான இலக்கு நிதிசார் ஏற்பாடுகள் ரூபா மில்லியன் 1878 ஆகும் என்பதுடன், ஆண்டின் இறுதியில் 693.77 ஆன நிதிசார் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளும் ஆற்றல் அமைச்சுக்கு கிடைத்தது.

குறைந்த வசதிகளைக் கொண்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதின் கீழ் இலக்கு வீடுகளான 5132 இல் 4569 வீடுகளை பூர்த்தி செய்யும் ஆற்றல் இந்த ஆண்டில் கிடைத்தது. இது 89.2% ஆன விகிதமாகும். தோட்டத்துறை வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்காகக் கொள்ளப்பட்ட 430 வீடுகளில் 388 வீடுகளின் வேலைகளை ஆரம்பிக்க முடிந்துள்ளது.

### ❖ காணி / வீடுகளுக்கான உறுதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(1) உட் பிரிவுக்கு அமைய காணிகள் / வீடுகளின் சட்டபூர்வமான உரித்த நீக்கம் செய்வது இடம்பெறுவதுடன், இந்த ஆண்டினல் இலக்காகக் கொள்ளப்பட்ட காணிகள் / வீடுகளின் உறுதிகள் 3000 இல் ஆண்டின் இறுதிக்குள் 2188 உறுதிகளை விடுவிக்க அமைச்சுக்கு ஆற்றல் கிடைத்ததுடன் இது 72.93%ஆன விகிதமாகும்.

### ❖ கூட்டாட்சி ஆதனங்களுக்கான சான்றிதழ்களை வெளியிடல், முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குழுக்களைப் பதிவு செய்தல்.

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையினால் கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பிலான சான்றிதழ்களை வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குழுக்களை பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கயைம இந்த இலக்காகக் கொள்ளப்பட்ட பூரணமான, பகுதியளவிலான மற்றும் தற்காலிக கூட்டாட்சிச் சான்றிதழ்களை வெளியிடுவது 75 ஆக இருந்ததுடன், ஆண்டில் 110 சான்றிதழ்களை வெளியிட வாய்ப்புக் கிடைத்தமையானது வளர்ச்சியான முன்னேற்றமாக உள்ளது. மேலும் இலக்கு முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைப் பதிவு செய்தல், பதிவைப் புதுப்பித்தல் மற்றும் செயலிழந்துள்ள முகாமைத்துவக் குடுக்களை மீளத் தாபித்தல் 190 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் 432 எனும் விசேட முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

## 9.4 தொழில்நுட்பப் பிரிவு

### ❖ நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்

நிர்மாணக் கைத்தொழிலானது நாட்டின் அபிவிருத்தியில் நேரடியாக தாக்கம் செலுத்துவதனால் இதனை மென்மேலும் வினைத்திறனுடனும் தரமாகவும் உயர்மட்டத்திற்குக் கொண்டுவருதல் மற்றும் பிராந்திய ரீதியிலும் பூகோள ரீதியிலும் போட்டித்தன்மை மிக்க மட்டத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை தாபிக்க அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளை செய்யும் பொருட்டும், நிர்மாணக் கைத்தொழிலின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், தரப்படுத்துவதற்குமாக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இந்தச் சட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் 2014.09.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ளும் ஆற்றல் கிடைத்தது.

### ❖ நிர்மாணிப்பு அபிவிருத்தித் துறையின் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம், அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம் மற்றும் அரசாங்க தொழில்சாலை ஆகிய நிறுவனங்களை வழிநடாத்துவதன் கீழ் நிர்மாணக் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

கடுவலை நெடுஞ்சாலைக்குப் பிரவேசிக்கின்ற நுழைவுப் பாதைக் கட்டிடம், பல்லேகெலே சிறைச்சாலைகள் கட்டிடம், அநுராதபுரம் பிரதான விளையாட்டு அரங்கு, விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் தடாகம், வடமேல் பல்கலைக் கழகத்தின் விளையாட்டு அரங்கு ஆகியன இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாணக் கைத்தொழில்களில் பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட கருத்திட்டங்கள் சிலவாகும் என்பதுடன், அதற்கு மேலதிகமாக நாடு முழுவதிலும் பாரியளவிலான கருத்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட சகல கருத்திட்டங்கள் தொடர்பிலும் உரிய நிறுவனங்களை வழிநடாத்தல், நிர்மாணக் கருத்திட்டங்களை தடைகளின்றி மேற்கொள்வதற்கு உதவியளித்தல், நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சகல பணிகளையும் முறையாக நிறைவேற்றிக் கொடுக்க அமைச்சு இந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்திருந்தது.

### ❖ நிர்மாணக் கலைஞர்களை பயிற்றுவித்தல்

நிர்மாணத் துறையில் தற்போது காணப்படுகின்ற தகைமைவாய்ந்த தொழில்சார் வல்லுனர்களின் பற்றாக்குறையை

தவிர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) கட்டமைப்புக்கு, முன்னைய அறிவை இனங்காண்பதன் மூலம் (RPL) தற்போது நிர்மாணத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்சார் கலைஞர்களை இணைப்புச் செய்வதற்கு NVQ / RPL நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குதல், உரிய கொடுப்பனவுகளை ஆராய்ந்துபார்த்து கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு சிபாரிசுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய வேலை மதிப்பீட்டுத் திருத்தங்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

- **''மஹாபீமாணீ'' தேசிய வாரம் மற்றும் விருது வழங்கும் வைபவம்**

நிர்மாணிப்புத் துறையின் முன்னேற்றத்திற்காக நிர்மாணிப்புக் கலைஞர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழில்வல்லுனர்களை பாராட்டும் நோக்கத்துடன் இந்த அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் இலங்கை நிர்மாணச் சங்கத்துடன் இணைந்து மஹாபீமாணீ தேசிய விருது வழங்கும் வைபவத்தை நடாத்தியது.

இதனை முன்னிட்டு பசுமைக் கட்டிடங்கள்/ பூர்த்திசெய்யப்பட்ட மதிப்பீட்டு முறையியல்களை மேம்படுத்துவதற்காக இலங்கைக் கட்டிடச் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதையடுத்து மேற்படி சபையின் உதவியுடன் சிறந்த பசுமை நிர்மாணிப்பு விருது வழங்கும் நிகழ்வும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் நிர்மாணிப்புத் துறைக்கு இளைஞர்களின் பலத்தை அதிகம் கவர்ந்தெடுப்பதற்காக சிறந்த கலைஞர்கள், இயந்திரசாதன இயக்குனர்கள், இயந்திரசாதன கலைஞர்களைப் பாராட்டுவதற்கான போட்டி நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டது.

## 9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் பொறுப்பேற்கப்பட்ட வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பது தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், 2014 ஆம் ஆண்டில் 55 உறுதிகளை முறையாக வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடிந்தது.

வீடமைப்புச் சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் போதும் ஒவ்வொரு வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்தும் வீட்டிற்கான விலைமதிப்புப் பெறுமதி அறவிட்டுக்கொள்ளப்பட்டதுன், இந்த ஆண்டில் அவ்வாறு அறவிட்டுக்கொள்ளப்பட்ட மொத்த விலைமதிப்புத் தொகை ரூபா 2,440,671.25 ஆகும். மேற்படி மொத்தத் தொகையும் அமைச்சினால் தேசிய வீடமைப்பு நிதியத்தில் செலவு வைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 9.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2014 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய உத்தேச கணக்காய்வு அறிக்கைகள் 29 இனைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதற்கான முக்கிய காரணம் விசாரணை நடவடிக்கைகளை வழிநடாத்துவத்றகும், கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பிலான அறிவைக் கொண்ட அனுபவம்மிக்க பதவியணியினர் இப்பிரிவில் இல்லாமையாகும். எவ்வாறாயினும் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய உத்தேச அடிப்படை விசாரணைகள் 05 இன் வேலைகளை நிறைவு செய்வதற்கு இந்த ஆண்டில் ஆற்றல் கிடைத்து

எவ்வாறாயினும் வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் 04 உம் ஒரு காலாண்டுக்கு ஒன்று வீதம் முறையாக நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான சிக்கல்கள் பற்றி கலந்துரையாடப்பட்டு அவற்றை சீர்செய்வதற்கும் சிக்கல்களைக் குறைத்துக்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# 2014 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்



வெலன்கொல்ல வீடமைப்புக் கருத்திட்டம்



குணசிங்கபுர வீடமைப்புக் கருத்திட்டம்



மத்தேகொட வீடமைப்புக் கருத்திட்டம்



கஹதுடுவ வீடமைப்புக் கருத்திட்டம்



தெதுறு ஓயா கருத்திட்டத்திற்கு வான் கதவுகள் 08 ஐப் பொருத்தல்



அத்திக்காவ கருத்திட்டத்திற்கு வான் கதவுகள் 08 ஐப் பொருத்தல்

## 10. அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள்

### ❖ நிரந்தர பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாது போனமை.

அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியான பிரதம நிதி அலுவலர் பதவியின் வெற்றிடத்தை, இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. மேலும் நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்படுகின்ற உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு) மற்றும் கனிய அளவையாளர் ஆகிய பதவிகளின் வெற்றிடங்களை, உரிய நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த அலுலவர்களுக்குக் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை.

மேலும் இணைந்த சேவைகளுக்கு உரித்தான அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் அபிவிருத்தி அலுவலர் சேவையின் அலுவலர்களது இடமாற்றம் மற்றும் ஓய்வுபெறல் காரணமாக ஆண்டு முழுவதிலும் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அபிவிருத்தி அலுவலர் / அபிவிருத்தி உதவியாளர் ஆகிய பதவிகளில் பெரும் எண்ணிக்கையான வெற்றிடங்கள் காணப்பட்டமையினால் அமைச்சின் அன்றாட பணிகளை முறையாக மேற்கொள்வதில் தடை ஏற்பட்டது.

### ❖ சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு போதியளவு நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை

அமைச்சுக்குத் தேவையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு போதியளவு ஏற்பாடுகள் கிடைக்காமை காரணமாக 2014 ஆம் ஆண்டு அமைச்சின் அன்றாடப் பணிகளுக்கு தடை ஏற்பட்டது. அமைச்சில் சேவையாற்றிய அலுலவர்களின் உபயோகத்திற்குப் போதியளவில் கணனி இயந்திரங்கள், பிரதிபண்ணி இயந்திரங்கள் கிடைக்கவில்லை என்பதுடன், அவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் போதியளவில் ஏற்பாடுகள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்காமை காரணமாக தற்போது பயன்படுத்துகின்ற உபகரணங்களையே அதிகளவில் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. இதனால் மேற்படி உபகரணங்களும் அடிக்கடி சேதமடைகின்ற நிலைமைகள் ஏற்பட்டதுடன், இதனால் நாளாந்தப் பணிகளை முறையாக நிறைவேற்றிக் கொள்வது கடும் சவாலாக அமைந்திருந்தது.

### ❖ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கிய சவால்கள்

2014 ஆம் ஆண்டு முழுவதிலும் வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் தொடர்மாடி வீடமைப்புத்திட்டங்களை மறுசீரமைக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான நிதி ஏற்பாடுகள் திறைசேரியினால் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், தேவையான ஏற்பாடுகளை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட அசௌகரியங்கள் காரணமாக இலக்குத் திகதிகளில் வீடமைப்புக் கருத்திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்யும் ஆற்றல் கிடைக்கவில்லை. மேலும் உப ஒப்பந்ததாரர்களில் காணப்பட்ட தாமதங்கள் மற்றும் ஆண்டு முழுவதிலும் நிலவிய மூலப்பொருட்களின் விலைகளின் மாற்றங்கள் காரணமாக வீடமைப்புக் கருத்திட்டங்களின் மதிப்பீட்டுச் செலவினத்தை விட கூடுதலான செலவினை ஏற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டது.


2014 ஆம் ஆண்டு நிலவிய காலநிலை மாற்றங்கள் காரணமாக வீட்டு அலகுகளின் வேலைகளை ஆரம்பிப்பது தாமதமடைந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இலக்காகக் கொள்ளப்பட்ட வீடுகள் அனைத்தினதும் வேலைகளை நிறைவுசெய்வதற்கும் இந்த ஆண்டில் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

### ❖ நிர்மாணத் துறையில் எதிர்நோக்கிய சவால்கள்

இந்த அமைச்சின் கீழ் நிர்மாணக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு நிர்மாணக் கருத்திட்டங்களை பெற்றுக் கொடுக்கும் பிரதான வழிமுறையாக இருப்பது

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கருத்திட்டங்களைப் பெற்றுக் கொடுப்பதாகும். மேலும், மேற்படி கருத்திட்டங்களில் பெரும்பாலானவை அரசதுறையின் கருத்திட்டங்களாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் அமைச்சுக்குக் கிடைத்த நிர்மாணக் கருத்திட்டங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மேலும் கருத்திட்டங்களுக்குப் பொருத்தமான காணிகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள், ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட தாமதங்கள் மற்றும் அசௌகரியங்கள் காரணமாகவும் உப ஒப்பந்ததாரர்களில் காணப்பட்ட தாமதம் காரணமாகவும் நிர்மாணத் துறையில் இலக்காகக் கொள்ளப்பட்ட பௌதீக முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாது போனமை இந்த ஆண்டில் அமைச்சு எதிர்நோக்கிய முக்கிய சவாலொன்றாகும். மேலும் ஆண்டு முழுவதிலும் நாட்டில் நிலவிய காலநிலை மற்றும் நிர்மாணத் துறையின் மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் இலக்கு முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாது போனமைக்கான காரணங்களாகும்.



ඉදිකිරීම්, ඉංජිනේරු සේවා, නිවාස හා පොදු පහසුකම් අමාත්‍යාංශය

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

Ministry of Construction, Engineering Services, Housing & Common Amenities